www.tamilarangam.net

# தொடரும் கடத்தல்கள்...

தீப்பொறி அமைப்பை ஸ்தாபித்தவர்களில் ஒருவரான கேசவன், பல்கலைக்கழக மாணவர் இருவர் உட்பட 10 பேர் மே மாதம் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு, அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரிவதற்குமுன் மீண்டும் 4 பேர் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் 30ஆம் திகதியன்று யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த த. செல்வநிதி, மனோகரன், இன்னொரு பெண் (பெயர் தெரியவில்லை) உட்பட வவுனியா மாவட்டப் பாடசாலையொன்றின் ஆசிரியர் தில்லைநாதன் ஆகியோரே புலிகளால் கடத்தப்பட்டோராவர்.

கவிஞரும், பெண்ணிலைவாதியுமான த.செல்வநிதி (செல்வி, தமயந்தி என்ற பெயர்களாலும் அழைக்கப்படுபவர்) கலைப்பீட 3ஆம் வருட மாணவியாவார். "சொல்லாத சேதிகள்" என்ற கவிதைத் தொகுதியில் வரும் கவிஞர்களில் ஒருவரான இவர் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் உறுப்பினரும் ஆவார். யுத்தத்தினால் அநாதைகளாக்கப்பட்ட பெண் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக ஏற்கெனவே புலிகளால் கொல்லப்பட்ட விரிவுரையாளர் ராஜனி திராணகமவால் ஸ்தாபிக்கப்பட்ட "பூரணி" பெண்கள் நிலையத்தின் பராமரிப்பாளர்களில் ஒருவராகவும் விளங்கினார். இப் பூரணி நிலையமும் ஏனைய பொது நிறுவனங்களைப் போலவே புலிகளால் 'விழுங்கப்பட்டது' தெரிந்ததே.

செல்வி, புளொட்டின் உட்கட்சி ஜனனாயக மறுப்பு நடவடிக்கைகள் காரணமாக தான் அங்கம் வகித்த அதன் பெண்கள் அமைப்பிலிருந்து ஒதுங்கினார். "தோழி" என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்த செல்வி புளொட்டின் பெண்கள் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராவர்.

30ஆம் திகதி செல்வி தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ற புலிகள் தாம் அவரை ஒன்றரை மணி நேரத்தில் 'விசாரித்துவிட்டு' விடுவதாகக் கூறி அழைத்தார்கள். வீட்டார் அனுப்ப முடியாது என மறுக்கவே அவரைப் பலவந்தமாக இழுத்துச் சென்றுள்ளனர். நாடக அரங்கவியல் விசேட பட்டப்படிப்பு மாணவியும், நாடகங்களில் ஆர்வமுடன் பங்கேற்று நடிப்பவருமான செல்வி, பெண்கள் சம்பந்தமான பெங்களூர் மகாநாட்டிற்கு மறைந்த பெண்ணிலைவாதியும், கவிஞருமான சிவரமணியுடன் சென்று கலந்துகொண்டவர். ஆனால் புலிகளோ, தம்மைப் பற்றிய தகவல்களை வெளியிலுள்ள பத்திரிகையாளர்கட்கு அனுப்புபவர் என்றும், கிறிஸ்தவ நிதி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும் குற்றம் சாட்டி அவரைக் கடத்தியுள்ளனர். புலிகளின் 'அலுவலகங்களில்' இக் கடத்தல் குறித்து விசாரித்தபோது, "உயிருக்கு ஆபத்தில்லை!" என்று மட்டும் கூறினர்.

வணிகபீட மாணவரான மனோகரனையோ, ஆசிரியர் தில்லைநாதனையோ கடத்தியதற்கான காரணம் இதுவரை புலிகளால் அறிவிக்கப்படவில்லை. எனினும் கேசவனுடன், பல்கலைக் கழக மாணவர்களான கோவிந்தன், சிறீநிவாசன் ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் புலிகள் யாழ்பல்கலைக்கழகத்தில் நடாத்திய 'கொள்கை' (கொலை?) விளக்கக் கூட்டத்தின் முடிவில் அவர்களை மன்னித்துவிட முடியாதா? என்ற கேள்வியை எழுப்பியவர் இந்த மனோகரனே என்பது குறிப்பிடத் தக்கது. (இது பற்றி எமது முதலாவது பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.)

புலிகள் தங்களின் இத்தகைய சனனாயக விரோத பாஸிஸத்தனமான நடைமுறைகளினூடாக எமது தேசத்தில் பல்வேறு துறை சார்ந்த புத்திசீவிகளையும், சனனாயகவாதிகளையும், போராளிகளையும் ஒன்றில் கொன்றோ, நாடுகடத்தியோ அல்லது சிறையிலடைத்துச் சித்திரவதை செய்தோ தம்மைப் பாதுகாத்துக்கொள்ளத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். தமிழீழ விடுதலையானது புலிகளுக்கும், கரடிகளுக்கும் தான் சொந்தம் என்று புலிகள் நினைக்கிறார்கள் போலும். மனிதர்களே அற்ற ஒரு தேசத்தில், மனிதத்துவத்தின் புதைமேட்டின் மீது புலிக்கொடியை நாட்டி ஆட்சி செலுத்தும் வெறி புலிகளுக்கு இருப்பது பற்றி யாரும் பேசாமல் மௌனமாக இருப்பது எத்தனை நாளைக்கு?

உங்கள் ஒவ்வொருவருக்குமான சவக் கிடங்கையும் நீங்களே வெட்டுங்கள் எனப் புலிகள் உத்தரவிடும்வரை கேள்விகள் கேட்காமல் இருக்கப் போகிறோமா?

தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய் என முழங்குவோம். புலிகளின் காட்டுமிராண்டித்தனத்தை அம்பலப்படுத்துவோம். தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறையுள்ள ஒவ்வொருவருடையதும் உரிமை மட்டுமல்ல, கடமையும் கூட இது.

— நண்பர்கள் (ஈழம்)

---

எந் நேரத்திலும் கொல்லப்படக்கூடிய சூழலிலிருந்து வரும் இப் பிரசுரத்தை இயன்றவரை பரவச்செய்யுங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்